DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S.11/2024** |
| **Deposition of witness for** | : | **Plaintiff** |
| **Serial No. of Witness** | : | **PW1** |
| **Name** | : | மாடசாமி |
| **Father's Name** | : | நடராஜன் |
| **Village** | : | சங்கனாங்குளம் |
| **Taluk** | : | திசையன்விளை |
| **Age** | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of day of 06.03.2026

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை.

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தை எழுத்துமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. 05.08.2020 வாதிக்கு ஏற்படுத்தி கொடுத்த உயிர் சாசனம் அசல் **வா.சா.ஆ 1**. உபயதரப்பினரின் தாயார் சரஸ்வதி அவர்களின் இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ 2**. உபயதரப்பினரின் தகப்பனார் நடராஜன் அவர்களின் இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ 3**. உபயதரப்பினரின் வாரிசு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ 4**. உபயதரப்பினரின் தகப்பனார் பெயரில் உள்ள 17.12.2012 ம் தேதிய பாகப்பாத்திய விடுதலை ஆவண எண் 4992/2012 ன் அசல் ஆவணம் **வா.சா.ஆ 5**. உபயதரப்பினரின் தகப்பனார் பெயரில் உள்ள பட்டா எண் 2202 இணையவழி நகல் **வா.சா.ஆ 6**. உபயதரப்பினரின் தகப்பனார் பெயரில் உள்ள பட்டா எண் 2203 இணையவழி நகல் **வா.சா.ஆ 7**. 04.01.2024 தேதிய பட்டா மாறுதலுக்கான விண்ணப்பம் **வா.சா.ஆ 8**. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.